வருகின்றன. இந்நிறுவனங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 25,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு, வேலைவாய்ப்பை வழங்கி வருகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் விளையும் தேங்காய் மட்டையிலிருந்து தரமான நார் உற்பத்தி செய்யப்படுவதால் இதனைக் கொண்டு நவீன இயந்திரங்கள் மூலமாக மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்ய புதிதாக குறுங் குழுமங்கள் அமைக்கும் முயற்சிகள் தற்போது அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முற்பகல் 9-45

ஆர்வமுள்ள 20 தொழில்முனைவோர்கள் ஒன்றுசேர்ந்து கயிறு குழுமம் அமைக்க முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில், குறுங்குழுமங்களுக்கு அனுமதியளிக்க உதவி செய்யப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரத்யேகமாகத் தயாரிக்கப்படும் பிரஸ்டில் தென்னை நாருக்கான புவிசார் குறியீடு, G.I. பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு கன்னியாகுமரி மாவட்டத்திலே கயிறு தொழிலை ஊக்குவிக்க அனைத்து நடவடிக்கைகளும் அரசு எடுத்து வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாமன்ற உறுப்பினர் அவையில் இல்லையென்றாலும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி, இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

106—

பேருந்து வசதி

***125718—திரு. சா. மாங்குடி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடியிலிருந்து சென்னைக்கு படுக்கை வசதியுடன்கூடிய புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

2024 ஜூன் 27]

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக தேவகோட்டையிலிருந்து காரைக்குடி வழியாக சென்னைக்கு படுக்கை வசதியுடன்கூடிய பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் காரைக்குடியிலிருந்து கூடுதலாக படுக்கை வசதி கொண்ட பேருந்து இயக்க வேண்டுமென்ற அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்கள்.*

திரு. சா. மாங்குடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-6-2024 அன்று தேவகோட்டையிலிருந்து திருப்பூர் வரை புதிய பேருந்து வழித்தடத்தையும் புதிய பேருந்தையும் வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, காரைக்குடியிலிருந்து ஏம்பல் வரை புதிய வழித்தடம் ஒன்றையும் தந்திருக்கிறார்கள், அதற்காகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே குளிர்சாதன வசதி கொண்ட பேருந்து சென்னைக்கு வருகிறது என்று கூறுகிறார்கள். இருந்தாலும், இரவு நேரங்களில் படுக்கை வசதியுடன்கூடிய குளிர்சாதனப் பேருந்து இயக்கப்பட்டால் மிகவும் வசதியாக இருக்கும்.

காரைக்குடியிலிருந்து கோயம்புத்தூர் வரைக்கும், தேவகோட்டையிலிருந்து கோயம்புத்தூர் வரைக்கும் இரவு நேரங்களில் குளிர்சாதனப் பேருந்து இல்லை. தனியார் பேருந்துகள்தான் இருக்கின்றன. ஆகவே, அப்பகுதிகளுக்கும் படுக்கை வசதியுடன்கூடிய குளிர்சாதனப் பேருந்து இயக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

காரைக்குடி, புதுவயல், கல்லூர், தேனிப்பட்டி, அரிமளம், புதுக்கோட்டை வழியாக சென்னை வரை படுக்கை

வசதியுடன்கூடிய இரவு நேரப் பேருந்து ஒன்றை இயக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

காரைக்குடி நகரப் பேருந்துகள். காரைக்குடியிலிருந்து புதுவயல், பீர்கலைக்காடு, ஜெயங்கொண்டான், ஏம்பல் வரை புதிய பேருந்து வேண்டுமென்று நீண்டநாட்களாக அந்தப் பகுதி மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே வந்து சென்ற பேருந்து, 3 ஆண்டு காலத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே அந்தப் பேருந்தை மீண்டும் இயக்க வேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். ஆகவே, அந்தப் பேருந்தையும் மீண்டும் அந்த வழித்தடத்தில் இயக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது) அதேபோன்று தேவகோட்டை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னொரு கேள்வி இருக்கிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வழித்தடம் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து, பதிவு செய்தமைக்கு நன்றி.

தேவகோட்டையிலிருந்து காரைக்குடி வழியாக சென்னைக்கு தடம் எண் 136 NSS குளிர்சாதனமில்லா இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட பேருந்து, தினசரி தேவகோட்டையிலிருந்து இரவு 8–15 மணிக்கு புறப்பட்டு காரைக்குடி வழியாக இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்தில் காரைக்குடி ஏறுமிடமாகவும், இறங்குமிடமாகவும் இணையதள முன்பதிவில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, காரைக்குடி பயணிகள் மேற்கூறிய பேருந்தில் காரைக்குடியிலிருந்து சென்னைக்கு படுக்கை வசதி முன்பதிவு செய்து பயணிக்கலாம். மேற்படி பேருந்தில் கொள்ளளவு திறனில் 72.72 சதவிகிதம் மட்டுமே இப்போது பயன்பாட்டில் உள்ளது. இன்னும் காலியிடங்களாகவே பேருந்து பயணிக்கின்ற சூழல் உள்ளது. இந்நிலையில் காரைக்குடியிலிருந்து கூடுதலாக படுக்கை வசதிகள் கொண்ட பேருந்து இயக்க வேண்டுமென்ற அவசியம் எழவில்லை.

இதுதவிர, இராமேஸ்வரத்திலிருந்து காரைக்குடி வழியாக குளிர்சாதன படுக்கை வசதி கொண்ட பேருந்து இரவு 8–00 மணிக்கும், குளிர்சாதனமில்லா படுக்கை வசதி கொண்ட பேருந்து இரவு 7–30 மணிக்கும் காரைக்குடியிலிருந்து சென்னைக்கு இயக்கப்பட்டு

2024 ஜூன் 27]

வருகிறது. காரைக்குடியிலிருந்து சென்னைக்கு பயணம் செய்யும் பயணிகள் இந்தப் பேருந்தையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. மாங்குடி அவர்கள், இப்போது சென்னையிலிருந்து கோயம்புத்தூருக்கு சென்று புதுவயல் வரை எல்லா இடங்களுக்கும் பேருந்து கேட்டுவிட்டார். ஏற்கெனவே அவருடைய காரைக்குடி தொகுதிக்கு கிட்டத்தட்ட 6 வழித்தடங்களில் நீட்டிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. புதிய பேருந்து வழித்தடங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. புதிய பேருந்துகள் கொள்முதல் செய்வதற்கும் பழைய பேருந்துகளை மாற்றுவதற்கும் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அதிகப் பேருந்துகளை வாங்காத காரணத்தினால், நம்முடைய மாண்புமிகு திராவிட மாடல் முதல்வர் அவர்கள் அளித்திருக்கின்ற தொகை பழைய பேருந்துகளை மாற்றுவதற்கு பயன்படுத்தப்படுகிறது. அவையெல்லாம் மாற்றம் செய்யப்பட்ட பிறகு புதிய வழித்தடங்கள் குறித்து யோசனை செய்யலாம்.

முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி அவர்கள்.*

திரு. சா. மாங்குடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வழித்தடங்களில் குளிர்சாதனப் பேருந்துகளை இயக்க வேண்டுமெனக் கேட்டிருக்கிறேன். மீண்டும் அதனை பரிசீலிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

எனது தேவகோட்டை பகுதியில் தேவகோட்டை, சிறுவாச்சி, T. *சிறுவனூர் உயர்நிலைப் பள்ளி, சுண்டமங்கலம், அனுமந்தக்குடி, கண்ணங்குடி வரை புதிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், 6 வழித்தடங்களை நீட்டிப்பு செய்துதர வேண்டுமென்று ஒரு பட்டியல் வைத்திருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதி தர வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

எனது காரைக்குடி தொகுதி மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக எனது மானமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரைக்குடி நகரப் பகுதி, பெரிய வளர்ந்த பகுதி. அப்பகுதியில் சுற்றுவட்டப் பேருந்து இயக்கப்பட வேண்டுமென்று நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன். பழைய பேருந்து நிலையத்தில் தொடங்கி, கழனிவாசல் பத்திரப் பதிவு அலுவலகம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், சட்டக் கல்லூரி, மாவட்ட தலைமை மருத்துவமனை, Water Tank, *வருமான வரி அலுவலகம், புதிய பேருந்து நிலையம், பெரியார் சிலை, கள்ளுக்கட்டி வரை சென்று, மீண்டும் பழைய பேருந்து நிலையத்தை அடையக்கூடிய அளவில் பேருந்து வழித்தடம் தர வேண்டும். அதேபோன்று, பழைய பேருந்து நிலையம், கழனிவாசல்,* Water Tank, *பாரி நகர், அழகப்பா பொறியியல் கல்லூரி, அழகப்பா பல்கலைக்கழகம், கல்லூரிகள், இரயில்வே நிலையம் வரையிலான வழித்தடத்தில் சுற்று வட்டப் பேருந்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அதிக அளவிலான பேருந்து வழித்தடங்கள் அளிக்கப்பட்டுள்ளன. அதற்காக எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவற்றையெல்லாம் எழுதிக்கொடுத்துவிடுங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. மாங்குடி அவர்கள் காரைக்குடியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டட திறப்பு விழாவிற்கு நாங்கள் சென்றிருந்தபோது, மாவட்ட அமைச்சர் அண்ணன், திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களுடன் சேர்ந்து சுற்று வட்டப் பாதையில் பேருந்து தேவை குறித்து கூறியிருந்தார்கள். ஏற்கெனவே காரைக்குடி இரயில்வே நிலையத்திற்கு பேருந்து இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. மற்ற பகுதிகளையும் எழுத்துப்பூர்வமாக அளித்தால் அதுகுறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு.* N. *அசோக்குமார், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*